பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்.105 **நாள்: 21.05.2025**

பெருநகர சென்னை மாநகராட்சியில் விளம்பரப் பலகைகள் அமைப்பதற்கு நிகழ்நிலையில் (Online System) அனுமதி வழங்கும் நடவடிக்கை இன்று (21.05.2025) முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் விளம்பரப் பலகைகள் நிறுவுவதற்கு மாநகராட்சியின் சார்பில் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு ஒப்புதல் வழங்குவதில் தேவையான ஆவணங்களை நேரடியாக அலுவலகம் வந்து சமர்ப்பிக்கும் முறை நடைமுறையில் இருந்தது.

இந்த முறையினை மாற்றி வெளிப்படைத் தன்மையாகவும், திறனோடும், எளிதாகவும் அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக நிகழ்நிலையில் (Online System) அனுமதி வழங்கும் நடவடிக்கை இன்று (21.05.2025) முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை உரிய ஆவணங்களோடு பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் (www.chennaicorporation.gov.in) பதிவேற்றம் செய்து விண்ணப்பத்தின் நிலையினை அறிந்து கொள்ளலாம். இந்த முறையில் எளிமையாகவும், காலதாமதமின்றியும் ஒப்புதல் வழங்குவதற்கும், அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி